## தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. பொதுக்குழு கூடுகிறது!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 01-06-2025 ஞாயிற்றுகிழமை காலை 9.00 மணியளவில் தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம், மதுரை, உத்தங்குடி, "கலைஞர் திடலில் நடைபெறும்.

அதுபோது பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. கழக ஆக்கப்பணிகள்
2. தணிக்கைக்குழு அறிக்கை

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் - 03.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி கேள்விகளைக் கண்டாலே அஞ்சுகிறது!

# யாருக்கும் அஞ்சாத ஊடகவியல் இல்லை என்றால் மக்களாட்சி இருளில் மாண்டுவிடும்!

### உலக பத்திரிகையாளர் சுதந்திர நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, மே 4-**

**உலக பத்திரிகையாளர் சுதந்திர நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய பா.ஜ.க. அரசு கேள்விகளைக் கண்டாலே அஞ்சுகிறது என்றும், யாருக்கும் அஞ்சாத ஊடகவியல் இல்லை என்றால் மக்களாட்சி இருளில் மாண்டுவிடும் என்றும் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஊடக சுதந்திரத்துக்கான உலகத் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் இடம் 151 என படுபாதாளத்தில் உள்ளது. காரணம் என்ன?

ஏனென்றால் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி கேள்விகளைக் கண்டாலே அஞ்சுகிறது. ஊடக அலுவலகங்களில் ரெய்டு நடத்துகிறது, செய்தியாளர்களைச் சிறையில் தள்ளுகிறது, பா.ஜ.க. அரசின் ஊழல்கள், உரிமை மீறல்கள் மற்றும் பெரும்பான்மைவாதப் போக்கை அம்பலப்படுத்துவோர்களை அடக்குகிறது.

உலகப் பத்திரிகை சுதந்திர நாளான இன்று, 'யாருக்கும் அஞ்சாத ஊடகவியல் இல்லையென்றால் மக்களாட்சி இருளில் மாண்டு விடும் என்பதை நமக்கு நாமே நினைவூட்டிக் கொள்வோம். அதனால்தான், பத்திரிகை சுதந்திரத்தைக் காப்பது என்பது ஊடகங்களுக்காக மட்டும் அல்ல, குடிமக்கள் அனைவரின் கேள்வி கேட்கும், உண்மையை அறிந்துகொள்ளும், அதிகாரத்தை நோக்கி உண்மையை உரைக்கும் உரிமைக்கானதாக ஆகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கல்வியாளர்கள் கூடிப் பாராட்டு விழா நிகழ்த்துவது

# முதல்வரின் வெற்றிக்குச் சூட்டும் மகுடம்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



**சென்னை, மே 4-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ள கடிதத்தில், "உங்களுக்குக் ( முதல்வருக்கு) கல்வியாளர்கள் கூடிப் பாராட்டு விழா நிகழ்த்துவது, உங்கள் வெற்றிக்குச் சூட்டும் மகுடமாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களுக்கு, கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு,

வணக்கம்.

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை மாநிலங்களின் முதலமைச்சர்களே நியமித்துக் கள்ளலாம் என்ற வரலாற்று உரிமையை உச்சநீதிமன்றத்தில் போராடிப் பெற்றுத்தந்த உங்களுக்குக் கல்வியாளர்கள் கூடிப் பாராட்டு விழா நிகழ்த்துவது உங்கள் வெற்றிக்குச் சூட்டும் மகுடமாகும்.



கண்ணகிக்குப் பெருமை கற்புக்கரசி என்று பெண்களால் பாராட்டப்பட்டதுதான் என்று இளங்கோவடிகள் எழுதினார். அதுபோல ஒரு ஆட்சித் தலைவருக்குச் சிறப்பு கல்வியாளர்களால் கொண்டாடப்படு வதுதான்.

முத்தமிழறிஞர் கலைஞர் இருந்திருந்தால் இந்த வெற்றியில் மகிழ்ந்து உங்கள் . நெற்றியில் இன்னொரு முறை முத்தமிட்டிருப்பார். என் மனம் எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டுக்காக தவம் செய்த நீங்கள் இந்தியா முழுமைக்கும் மழைவரம் பெற்றுத் தந்திருக்கிறீர்கள். அதனால் இந்த விழா ஒரு தேசியத் திருவிழா வாகிறது.

கல்வியாளர்கள் உங்கள் தோளுக்குச் சூட்டும் மாலையில் நானும் ஒரு பூவாக இருக்கிறேன்; வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் விஜயாதாயன்பன் தனக்கு மேலும் மூன்று வருடங்களுக்கு பணி நீட்டி வழங்கியதற்காக சந்தித்து நன்றி தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 1.5.2025 அன்று முகாம் அலுவலகத்தில், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ் தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் கோவை புகைப்பட நிபுணர் கோவை சுப்பு தமது 60ஆவது பிறந்த நாளையொட்டி குழந்தைகளுடன் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள்: 'தமிழ் வார விழா' நிறைவு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, மே 4-

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாள் - 'தமிழ் வார விழா' நிறைவு விழா முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை (05.05. 2025) கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது.

முதலமைச்சர் அவர்களால் 22.4. 2025 அன்று சட்டமன்ற பேரவையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ், 'பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும்' எனவும், இவ்விழாவில் கவியரங்கங்கள் மற்றும் இலக்கிய கருத்தரங்குகள், பாரதிதாசன் இளம் படைப்பாளர் விருது, தமிழ் இலக்கியம் போற்றுவோம், பள்ளிகளில் தமிழ் நிகழ்ச்சிகள், தமிழ் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பு வெளியிட்டார்கள்.

தமிழ் வளர்ச்சித்துறை, செய்தித் துறை, கலை பண்பாட்டுத்துறை என பல்வேறு அரசு துறைகள் இணைந்து இத் திட்டத்தினை 29.4.2025 முதல் 5.5.2025 வரை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கவியரங்கங்கள், இலக்கிய கருத்தரங்குகள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் வார விழாவின் நிறைவு விழா 5.5.2025 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளார்கள். இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சித்துறையின் வாயிலாக 5 சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கியதன் தொடர்பாக அவர்களின் குடும்பத்தினருக்குப் பரிவுத் தொகையும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கி முதலமைச்சர் அவர்கள் விழா பேருரையாற்றுகிறார்கள்.

இவ்விழாவில் பல்லவி இசைக்குழுவின் வாயிலாக 'பாவேந்தரின் எழுச்சி பாடல்களும்', நரேந்திர குமார் நடன அமைப்பில் சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி மாணவியர்களின் 'தமிழ் அமுதுநாட்டிய நிகழ்ச்சி'யும், அனர்த்தனா குழுவினரின் 'சங்கே முழங்கு' மாபெரும் நடன நிகழ்ச்சியும், கலைமாமணி திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களின் தலைமையில் 'பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் விஞ்சி நிற்பது மொழி உணர்வா! சமூக உணர்வா! என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளன.

பாவேந்தருக்கு பெருமை சேர்க்கும் வகையில் நடத்தப்படும் இவ்விழாவில் தமிழ் ஆர்வலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைக்கிறார்

# பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் நீர் மோர் பந்தல்!

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ பங்கேற்பு – பகுதி செயலாளர் பெர்னார்ட் தலைமை!

*சென்னை, மே 4 -*

*பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் பகுதி செயலாளர் இ.எஸ். பெர்னாட் ஏற்பாட்டில் குரோம்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள நீர் மோர் பந்தலை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் இன்று காலை திறந்து வைக்கிறார். பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ பங்கேற்று சிறப்பிக்கிறார்.*

*பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் குரோம்பேட்டை, ஜி.எஸ்.டி சாலை, அடையாறு ஆனந்த பவன் அருகே அமைக்கப்பட்டுள்ள நீர் மோர் பந்தல் திறப்பு விழா இன்று காலை 10.00 மணியளவில் பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னாட் தலைமையில் நடைபெறுகிறது.*

*பல்லாவரம் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் வை.தா.ர. மூர்த்தி வெ. கர்ணல், பா. மீனா, ஏ. வெங்கடேசன், ஆர் செந்தில் குமார், த. பார்த்திபன், பி. ராமகிருஷ்ணன், ஜெ.ஆறுமுகம், ஆ.சூசைராஜ், அ.ராமச்சந்திரராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். வட்ட கழக செயலாளர் த.கன்னியப்பன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு-சிறுநடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கொண்டு நீர் மோர் பந்தலை திறந்துவைக்கிறார்.*

*மாவட்ட துணைச் செயலாளர் - பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பிக்கிறார். தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், பல்லவரம் மண்டலக்குழுத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட பிரதிநிதிகள் க. ராஜாராமன், கி. தனசேகரன், பி.வி. தாமோதரன், ரஞ்சித் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் வி.என். சிலம்பரசன், எம். முருகையன், பா. வெங்கடேசன், ஆர்.கே நகராஜன், ச.முஜிபூர்ரகுமான், ர. காமேஸ்வரன் உள்ளிட்ட கழகத்தினர் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பி க்கின்றனர்.*



கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஆர்க்காடு வீராசாமி அவர்களை கழகத் துணைப் பொதுச் செயலாளராக அறிவிக்கப் பட்டுள்ள மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. உள்ளார்.

## அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை - சட்டப்பேரவையில்

# அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை செயல்படுத்துவது குறித்த ஆலோசனை கூட்டம்!

*சென்னை, மே 4-*

*பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சென்னை எழிலகத்தில் நேற்று (03.05.2025) நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள் மற்றும் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து இணை இயக்குநர், (கள்ளர் சீரமைப்பு) மற்றும் 38 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, திட்டங்களை விரைந்து செயல்படுத்துமாறு அறிவுரைகள் வழங்கினார்.*

*குறிப்பாக விடுதிகளுக்கு தரமான உணவுப்பொருட்கள் வாங்கி வழங்குவதனை உறுதி செய்யுமாறு அனைத்து மாவட்ட அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார். மேலும் புதிய விடுதிகள் துவங்குதல், பள்ளி விடுதிகளை கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்துதல், சொந்த கட்டடங்கள் கட்டுதல், கல்லூரி விடுதிகளில் மாணவ/மாணவியர் எண்ணிக்கையினை அதிகரித்தல், விடுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல் ஆகிய இனங்களில் சிறப்பு கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தினார்.*

*மேற்படி, ஆய்வுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.சா. விஜயராஜ்குமார், அரசு சிறப்பு செயலாளர், திருமதி. வ. கலையரசி, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் முனைவர். சீ.சுரேஷ் குமார், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*